[1973 நவம்பர் 21

சேலம்-செம்மன்குடல் பேருந்துப்பணி

*289 வினா—திரு. வீ. செல்லதுரை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், செம்மன்குடலுக்கும் சேலத்திற்கும் இடையே முத்தநாயக்கன்பட்டி, பெரமச்சூர், கருப்பூர் வழியாக பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை.

மாயூரத்திலிருந்து புதிய பேருந்து வழித்தடங்கள்

*290 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் சந்திப்பிலிருந்து பஸ் ஸ்டாண்ட் வில்லியநல்லூர்-கிழாய்-மணல்மேடு வழியாக கொள்ளிடம் பாப்பாகுடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம்.

*291 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மாப்படுகையிலிருந்து பஸ் ஸ்டாண்டு வழியாக கோடங்குடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம். சோழன் போக்குவரத்துக் கழகத்தின் பஸ் 4—5—1973 அன்று இருந்து இந்த பாதையில் சென்று வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் சந்திப்பிலிருந்து பஸ் ஸ்டாண்ட் வில்லியநல்லூர்-கிழாய்-மணல்மேடு வழியாக கொள்ளிடம் பாப்பாகுடிக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். கடந்த 7 ஆண்டுக் காலமாக இந்தக் கோரிக்கையை சட்டமன்றத்திலும், அதிகாரிகளிடத்திலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும்